முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள்.16.03.2026

O.S No. 168/2021

பி.வா.சா.1-ஜேக்கப் எட்வின்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் தச்சுவேலை பார்க்கிறேன். எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்வேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தினை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என் தொழில்கூடத்தின் பெயர் ஐசக் உட் ஒர்க்ஸ் ஆகும். உதயம் பதிவு சான்றிதழை பி.வா.சா,1 ஆக தாக்கல் செய்துள்ளேன். தமிழ்நாட்டு அரசின் கீழ் Tiny enterprises ல் கொடுத்த நிரந்தர பதிவு எண்.180610417 என்ற ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. Tiny enterprises ஒரு Cottage and village agri based micro enterprises என்று காட்டுவதற்கு ஆவணம் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி.

தச்சுதொழில் என்பது மரவேலை என்றாலும் குடிசை தொழில் அல்ல என்றாலும் சரியல்ல பிரதமர் வாஜ்பாய் திட்டத்தின் கீழ் குடிசைதொழிலுக்கான அனுமதி கொடுத்தார்கள், விவசாயம் சார்ந்த சிறுதொழிலுக்கான அனுமதி என்று சொல்லியதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அரசாங்கமே தரவில்லை. என்னுடன் என் மனைவி என் அம்மா கல்லூரி படிக்கும் 2 பெண் பிள்ளைகள் உள்ளார்கள். என் மூத்தமகள் பொறியியல் படித்து தற்போது மாவட்ட ஆட்சியர் தேர்வுக்கு படித்து வருகிறார். 2 வது மகள் மயக்க மருந்து சார்ந்த மருத்துவம் படித்து தற்போது பயிற்சி எடுத்து வருகிறார் என்றால் சரி. பி.வா.சா.1 ஆவணத்தில் ஐசக் உட் ஒர்க்ஸ்ன் கதவுஎண்.5/12 என்று உள்ளது என்றால் சரி. NIC2,4,5 digit என்று குறிப்பிட்டுள்ளதால் அது சின்ன கார்க், மரபெயின்ட்டிங் பிரஸ் மர ஸ்டிரா தயாரிப்பு சம்பந்தமானதொழில் தான் நான் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. அது குறித்து எனக்கு முழுமையான விவரம் தெரியாது.

நான் கதவு ஜன்னல் போன்ற மரவேலைகளை செய்து வருகிறேன். கதவு ஜன்னல்களுக்கு பெயின்ட் அடிப்பது இல்லை. என்னுடைய தொழிலுக்கான தொழில் உரிமம் பெற்று இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பி.வா.சா.1 ஆக தாக்கல் செய்துள்ளேன். ஐசக் உட் ஒர்க்ஸ்ஸன் மின் இணைப்பு எண்.143-022-211 என்றால் சரியல்ல. என்னுடைய சரியான எண் என்ன என்றால் எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படுவது என்னுடைய ஐசக் உட் ஒர்க்ஸ்ஸன் மின்கட்டண ரசீது என்றால் சரி. அது வா.சா,ஆ.9 ஆக குறியீடு செய்யபடுகிறது. அதன் பயன்பாட்டு எண்ணாக LA3A1 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. மேற்படி இணைப்பானது சிறுதொழில் நிறுவனம் குடிசைதொழில் நிறுவனம் Low tension commercial purpose காக கொடுக்கபடும் மின்பயன்பாட்டு இணைப்பு என்றால் சரி. இந்த மின் இணைப்பிற்கு சராசரியாக 3000kw என்றாலும் என்னுடைய மின்கட்டண ரசீதில் சராசரியாக 7000kw என்று சொல்லப்பட்டுள்ளது என்றாலும் எனக்கு அந்த விவரங்கள் தெரியாது. அந்த மின் இணைப்பானது 3 phase மின் இணைப்பு என்றால் சரி.

விவசாய பயன்பாட்டிற்கு என்று கூறி 25 சதவீதம் நான் அதன் மானியம் வாங்கி வருகிறேன் என்றால் சரி. மின்அதிகாரியை சுவாதீன படுத்தி 7000kw இணைப்பை பெற்று விவசாயத்திற்கான மானியமும் பெற்று மரதொழில் செய்து வருகிறேன் என்றால் சிறுகுறு தொழிலுக்கான பயிற்சியை அரசாங்கத்திடம் இருந்து பெற்று அவர்களே பதிவு சான்றிதழ் கொடுத்து மின்இணைப்பு போன்ற சகல வசதியையும் செய்து கொடுத்தார்கள். நான் விவசாயத்திற்காக பெறவில்லை. எனக்கு அந்த விவரங்கள் எதுவும் தெரியாது. வயிற்று பிழைப்புக்காக நடத்தி வரும் சிறுதொழில் சுற்றுசூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்த வில்லை என்று சொல்லியுள்ளேன்என்றால் சரி. தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது

என்னுடைய வீடு என்றால் சரி என் வீட்டின் கதவு எண்.5/12 எ அது **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யபடுகிறது. உண்மையில் என் வீட்டின் தரைதளத்தில் தொழிலும் முதல் தளத்தில் நான் குடியிருந்து வருகிறேன் என்றாலும் இரண்டிற்குமே 5/12 கதவு எண் என்றாலும் சரியல்ல. வீட்டின் கதவு எண்.5/12 எ தொழிலுக்கான கதவு எண் 5/12 ஆகும். மேற்படி இருவேறு கதவு எண்களை காட்டும் ஆவணங்களை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

மாசுகட்டுபாட்டு வாரியம் எனது தொழிலை green category industry ஆக வகைப்பாடு செய்திருப்பதாகவும் அதன் கோடு 3010 என்றும் சொல்லியதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி.அதனை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். வாதியின் கணவர் நான் குடிசைதொழில் செய்வதற்கு ஆட்சேபனை இல்லை என்று 2017 ல் கையொப்பம் செய்து தந்தாரா என்றால் கொடுத்தார். 2018 ல் குடிசைதொழிலுக்கான செட்டை அழித்து விட்டு நான் பெரிய தொழில்கூடமாக கட்டினேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 வரைபடத்தில் காட்டப்பட்ட செட்அமைப்பை நான் இடித்து விட்டு தற்போது என்னிடம் காட்டப்படும் அனுமதி வரைபடத்தில் உள்ளதுபோல் நான் தொழில்கூடம் கட்டினேன் என்றால் அனுமதி வரைபடம் நான் தான் வாங்கினேன். அதில் குறிப்பிட்டுள்ளதுபோல் சொன்னால் மட்டுமே அனுமதி கொடுப்பதாக கூறினார்கள் அதனால் அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. ஆனால் நான் குடிசை தொழில் தான் செய்து வருகிறேன். அது **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யபடுகிறது.

5 குதிரைதிறன் கொண்ட மோட்டாரை இயக்கும்போது வனத்துறையிடம் அனுமதி பெறவேண்டும் என்றால் சரியல்ல. அது மரம் அறுவை மெசின் இல்லை. ஏற்கனவே அறுத்த மரங்களை பாலிஷ்போட்டு காடி போடுவது மட்டுமே வேலை ஆகும். மின் இணைப்பிற்கு 6

குதிரைதிறன் அளவிற்கு நான் அனுமதி பெற்று வைத்துள்ளேன். அறுத்த மரங்களை பாலிஷ்போட்டு காடி போடுவற்கு 5 குதிரைதிறன் அளவுள்ள பிளைனர் வைத்துள்ளேன். நான் மரத்தொழில் செய்வதற்கு தூசி அடைப்பான் அமைக்கவில்லை என்றாலும் ஒலி மாசை தடுப்பதற்கு எந்த வசதியும் ஏற்படுத்தவில்லை என்றாலும் சரியல்ல. எனது இடத்தை சுற்றி ரைஸ்மில் மாவுமில் போன்றவை செயல்படுவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. வா.சா,ஆ.11 ல் எனது இடத்தை சுற்றி குடியிருப்பு பகுதியாக காட்டி அனுமதி பெற்றுள்ளேன் என்றால் சரி.

நான் சொல்வதுபோல் ரைஸ்மில் மாவு மில் இல்லை என்றால் சரியல்ல. நான் அனுமதி பெற்றபோது சுற்றி வீடுகள் இல்லை தற்போது ரைஸ்மில் மாவு மில் போன்றவை வந்துள்ளது. வா.சா,ஆ.11 ல் எனது இடத்தின் தெற்கு பக்கம் 5/11 எ என்ற இடம் வாதியின் இடம் என்றால் சரி. எனது வீட்டிற்கு தெற்குபக்கம் 4 அடி வீதியும் அதற்கு தெற்கே தான் வாதியின் இடம் உள்ளது. வாதியின் 12 சென்ட் இடம் காலியாக உள்ளது அதற்கு அடுத்தது வீடு உள்ளது. வாதியின் வீட்டிற்கும் எனது இடத்திற்கும் இடையே 2 அடி 5 அங்குலம் கால்வாய் உள்ளது என்றால் சரியல்ல 4 அடி பாதை உள்ளது. 2021 ல் வாதிக்கு எதிராக நான் தாக்கல் செய்த கேவியேட் மனுவில் சொத்திற்கு தெற்கே ஓடை என்று நான் காட்டியுள்ளேன் என்றால் சரி. நான் எனது முதல் விசாரணையில் சொல்லிய அனைத்து விவரங்களுமே பொய் என்றாலும் மாசுகட்டுபாட்டு வாரியத்திலும் தீயணைப்பு துறையிலும் அனுமதி வாங்கவில்லை என்றாலும் மின்வாரியத்தை ஏமாற்றி மின்இணைப்பு பெற்றுள்ளேன் என்றாலும் எனது தொழிலை நிரந்தரமாக இழுத்து மூட வேண்டும் என்றாலும் சரியல்ல.

கோயிலில் ஏற்பட்ட பிரச்சனை என்று சொல்லியிருப்பதில் என்ன பிரச்சனை

என்றால் எனக்கு எதிராக டீக்கனார் போட்டியில் நின்று தோற்றதால் ஈகோ பிரச்சனை ஆகும். உண்மையில் வாதியோ மனைவியோ டீக்கனார் போட்டியில் நிற்கவில்லை என்றால் சரியல்ல. வாதியின் பிள்ளைகள் வெளியூரில்வேலை பார்க்கிறார்கள் என்றால் சரி. நான் அரசியல் கட்சி நிர்வாகி என்றால் சரியல்ல. கட்சி நிர்வாகி என்ற பொறுப்பை பயன்படுத்தி வாதியின் குடும்பத்தை கஷ்டபடுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா எனக்கு 12 ½ சென்ட் இடத்தை எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல. சாட்சி தற்போது அவரது அம்மா காலத்திற்கு பின் தனக்கு கிடைக்ககூடிய 12 ½ சென்ட் தனக்கு கிடைக்ககூடியது என்று கூறுகிறார். 2011 ல் என் பெயருக்கு சர்வே எண்.418/9 சி ல் 12 ½ சென்ட் எழுதி கொடுத்தார் என்றால் சரி. அந்த இடத்தில் தொழில்கூடத்தினை மாற்றி வைக்க எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் உள்ளது. வாதியின் வழக்கு அனுமதிக்கதக்கது என்றாலும் வாதி கேட்ட பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என்றாலும் சரியல்ல.